அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை இல: 04/2014

எனது இலக்கம்: CS/HR/13/II

அரசாங்க நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு,

சுதந்திர சதுக்கம்,

கொழும்பு 07

2014.05.24

சகல அமைச்சுக்களினதும் செயலாளர்கள்

திணைக்களத் தலைவர்கள்,

மாவட்டச் செயலாளர்கள் / பிரதேச செயலாளர்கள் மற்றும்

அரசாங்க நிறுவனங்களின் தலைவர்கள்

## <u>அரச முகாமைத்துவ உதவியாளர் சேவைப் பிரமாணக்குறிப்பின் அமுலாக்கம்</u>

2004 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 01 ஆம் திகதியிலிருந்து அமுலுக்கு வந்ததும் 2004.12.24 ஆம் திகதிய 1372/23 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான அரச முகாமைத்துவ உதவியாளர் சேவைப் பிரமாணக்குறிப்பிற்கு பதிலீடாக 2013.12.11 ஆம் திகதிய 1840/34 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட புதிய அரச முகாமைத்துவ உதவியாளர் சேவைப் பிரமாணக்குறிப்பானது 2013.04.02 ஆம் திகதியிலிருந்து அமுலுக்கு வரும்.

02. உள்ளீர்ப்பு

குறித்துரைக்கப்பட்ட திகதியிலுள்ளவாறு அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையின் வகுப்பு III, II, I மற்றும் அதிஉயர் வகுப்பிற்குச் சொந்தமான பதவிகளில் சேவையாற்றிக்கொண்டிருக்கும் சகல அலுவலர்களும் பிரமாணக்குறிப்பின் 14 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய பின்வரும் விதத்தில் புதிய பிரமாணக்குறிப்பின் கீழ் உள்ளீர்க்கப்படல் வேண்டும்.

அலுவலர்கள் தற்போது பெற்றுக்கொள்ளும் சம்பளம் மற்றும் சம்பள ஏற்றத்திகதி என்பன இவ் உள்ளீர்ப்புக் காரணமாக மாற்றப்படலாகாது.

(அ) குறித்துரைக்கப்பட்ட திகதியிலுள்ளவாறு அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையின் வகுப்பு III இலுள்ள அலுவலர்கள் புதிய சேவைப் பிரமாணக்குறிப்பின் கீழ் தரம் III இற்கு உள்ளீர்க்கப்படல் வேண்டும்.

(ஆ) குறித்துரைக்கப்பட்ட திகதியிலுள்ளவாறு அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையின் வகுப்பு II இலுள்ள அலுவலர்கள் புதிய சேவைப் பிரமாணக்குறிப்பின் கீழ் தரம் II இற்கு உள்ளீர்க்கப்படல் வேண்டும்.

(இ) குறித்துரைக்கப்பட்ட திகதியிலுள்ளவாறு அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையின் வகுப்பு I இலுள்ள அலுவலர்கள் புதிய சேவைப் பிரமாணக்குறிப்பின் கீழ் தரம் I இற்கு உள்ளீர்க்கப்படல் வேண்டும்.

(ஈ) குறித்துரைக்கப்பட்ட திகதியிலுள்ளவாறு அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையின் அதிஉயர் வகுப்பிலுள்ள அலுவலர்கள் புதிய சேவைப் பிரமாணக்குறிப்பின் கீழ் அதிஉயர் தரத்திற்கு உள்ளீர்க்கப்படல் வேண்டும்.

03. பதவியுயர்வுகள்

இப் பிரமாணக் குறிப்பின் 10 ஆம் பிரிவின் கீழ் குறிப்பிடப்பட்ட பதவியுயர்வுத் திட்டம் மற்றும் 08 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சைகள் என்பன 2013.04.02 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருதல் வேண்டும். எனினும், 15 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட இடைக்கால சலுகை ஏற்பாடுகளுக்கு அவைகள் உரித்துடையவையாகும். (பிரமாணக்குறிப்பின் இணைப்பு 07 மற்றும் 08 இற்கு அமைய பதவியுயர்வுகளுக்கான பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்)

04. வேறு

(அ) இப் பிரமாணக்குறிப்பின் 09 ஆம் பிரிவில் விதித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளுக்கமைய ஒவ்வொரு அலுவலரும் மொழித்தேர்ச்சியினைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். அதற்கிணங்க, அத்தகைய அலுவலர்களால் மொழித்தேர்ச்சியினைப் பெற்றுக்கொள்ளல் தொடர்பில் 2007.06.01 ஆம் திகதியிலிருந்து அரச முகாமைத்துவ உதவியாளர் சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ள அலுவலர்களுக்கு 7/2007 ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையிலும் தொடர்ச்சியாக வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகளிலும் உள்ள ஏற்பாடுகள் பிரயோகிக்கப்படல் வேண்டும்.

(ஆ) 2013.12.11 ஆம் திகதிய 1840/34 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் பிரதி ஒன்று இத்துடன் அனுப்பப்படுகின்றது.

ஒப்பம்/பி.பீ. அபேகோன்

செயலாளர்

அரசாங்க நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு

இணைப்பு 01

**சராசரி செயலாற்றுகை அடிப்படையில் அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையின் தரம் III இலுள்ள அலுவலர்களை தரம் II இற்கு பதவியுயர்த்துவதற்கான மாதிரி விண்ணப்பம்**

1. முதலெழுத்துக்களுடன் பெயர்: திரு/திருமதி/செல்வி
2. முதலெழுத்துக்களால் குறிக்கப்படும் பெயர் :
3. பிறந்த திகதி :
4. தேசிய அடையாள அட்டை இலக்கம் :
5. சேவைக்கு உள்வந்த திகதி :
6. இணைந்த சேவை நியமனக் கடிதத்தின் இலக்கம்:
7. நியமனம் உறுதிப்படுத்தப்பட்ட திகதி:
8. வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை சித்தியெய்திய திகதி மற்றும் சுட்டிலக்கம்:
9. 10 வருட சேவை பூர்த்திசெய்யப்பட்ட திகதி:
10. தற்போது சேவையாற்றும் அலுவலகம்:

................. ஆம் திகதியிலிருந்து அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையின் தரம் II இற்கான பதவியுயர்வினை எனக்கு வழங்கும்படி நான் இத்தால் கோருகின்றேன்.

.................................................................

விண்ணப்பதாரியின் கையொப்பம்

திகதி: ...................................................

<u>இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்</u>

திரு/திருமதி/செல்வி………………………………………………………………………………

இந்த அலுவலகத்தில் சேவையாற்றுவதுடன்

1. ........................... ஆம் திகதியிலுள்ளவாறு 10 வருட முனைப்பான சேவைக்காலம் ஒன்றைப் பூர்த்திசெய்துள்ளார்
2. 10 சம்பள ஏற்றங்களை உழைத்துள்ளார்
3. அனுமதிக்கப்பட்ட செயலாற்றுகை மதிப்பீட்டு நடைமுறைக்கமைய பதவியுயர்வுத் திகதிக்கு உடன்முன்வரும் 10 வருட காலப்பகுதியில் திருப்தியான அல்லது அதற்கு மேலான மட்டத்தில் செயலாற்றுகை ஒன்றை நிச்சயப்படுத்தியுள்ளார்
4. 10 வருட காலப்பகுதியில் அலுவலரினால் பெற்றுக்கொள்ளப்பட்ட அரைச் சம்பள அல்லது சம்பளமற்ற விடுமுறையின் எண்ணிக்கை .......... /அவர் 10 வருட காலப்பகுதியில் அரைச் சம்பள அல்லது சம்பளமற்ற விடுமுறையினைப் பெற்றிருக்கவில்லை.
5. கருத்திலெடுக்கப்படும் காலப்பகுதியில் ஏதேனும் தண்டனைக்கு (எச்சரிக்கைகள் தவிர்ந்த) உள்ளாக்கப்பட்டிருக்கவில்லை
6. அலுவலருக்கு எதிராக எந்தவித ஒழுக்காற்று நடவடிக்கையும் தொடரப்படவில்லை என்பதுடன் எதிர்காலத்தில் ஏதேனும் ஒழுக்காற்று நடவடிக்கையினை எடுப்பதற்கும் உத்தேசிக்கப்படவில்லை.
7. ......................... ஆம் திகதியிலிருந்து பதவியில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளார்
8. தரம் III இற்கான வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையினைச் சித்தியெய்தியுள்ளார்

என்பதனை நான் இத்தால் சான்றுப்படுத்துகின்றேன்.

உடன் முன்வரும் 5 வருடத்திற்குள் திருப்திகரமான சேவை ஒன்றினை அலுவலர் பூர்த்திசெய்துள்ளதால் ................................ ஆம் திகதியிலிருந்து அமுலுக்கு வரும்வண்ணம் தரம் II இற்கு பதவியுயர்த்தப்படுவதற்கு அவ் அலுவலரினை நான் இத்தால் பரிந்துரைக்கின்றேன்.

நிறுவனத் தலைவரின் கையொப்பம்

பெயர்:

பதவி:

(உத்தியோகபூர்வ முத்திரை)

திகதி.......................

குறிப்பு:- 1-8 வரையான தகைமைகளை அலுவலர் பூர்த்திசெய்யாதவிடத்து தயவுசெய்து அவற்றைக் குறிப்பிடவும்.

இணைப்பு 02

**சராசரி செயலாற்றுகை அடிப்படையில் அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையின் தரம் II இலுள்ள அலுவலர்களை தரம் I இற்கு பதவியுயர்த்துவதற்கான மாதிரி விண்ணப்பம்**

**பகுதி** I – (அலுவலரினால் நிரப்பப்படல் வேண்டும்)

1. (அ) முதலெழுத்துக்களுடன் பெயர்:

   (ஆ) முதலெழுத்துக்களால் குறிக்கப்படும் பெயர்:

   (இ) பெயர் மாற்றப்பட்டிருந்தால் முன்னர் பயன்படுத்திய பெயர் (பெயர் மாற்றப்பட்டால் மாத்திரம்):
2. பிறந்த திகதி :
3. தேசிய அடையாள அட்டை இலக்கம் :
4. சேவையின் முதல் நியமனத் திகதி:
5. இணைந்த சேவை நியமனக் கடிதத்தின் இலக்கம்:
6. சேவையின் தரம் II இற்குப் பதவியுயர்த்தப்பட்ட திகதி:
7. தற்போது சேவையாற்றும் அலுவலகத்தின் பெயர் மற்றும் முகவரி:
8. வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை சித்தியெய்திய திகதி:

........................................................................................................ ஆகிய நான் என்னால் கொடுக்கப்பட்ட மேற்படி விபரங்கள் உண்மையானது சரியானதும் என்று இத்தால் சான்றுப்படுத்துகின்றேன். என்னால் அளிக்கப்பட்ட மேற்படி விபரங்கள் பிழையானவை எனக் கண்டறியப்பட்டால் இச் சுற்றறிக்கைக்கேற்ப தரம் I இற்குப் பதவியுயர்த்துவதற்கான எனது கோரிக்கை புறக்கணிக்கப்படலாம் என்பதுடன் எனக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படலாம் என்பதை நான் முழுமையாக அறிவேன்.

.................................

அலுவலரின் கையொப்பம்

திகதி: .................................

பகுதி II

அமைச்சின் செயலாளர் / திணைக்களத் தலைவரின் சான்றுப்படுத்தல்

திரு/திருமதி/செல்வி……………………………………………………………………… அவர்கள்

1. அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையின் தரம் II இல் 10 வருடங்களைப் பூர்த்திசெய்த திகதி: ………….

2. 10 வருட காலத்தில் சகல சம்பள ஏற்றங்களையும் உழைத்திருத்தல் வேண்டும்

3. அனுமதிக்கப்பட்ட செயலாற்றுகை மதிப்பீட்டு நடைமுறைக்கமைய பதவியுயர்வுத் திகதிக்கு முன்னர் 10 வருட காலப்பகுதிக்குள் திருப்தியான அல்லது அதற்கு மேலான மட்டத்தில் செயலாற்றுகை ஒன்றை நிச்சயப்படுத்தியிருத்தல் வேண்டும்

4. வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையினைச் சித்தியெய்திய திகதி:

| | கணக்கீட்டு முறைமை | அலுவலக முறைமை |
|---|---|---|
| பரீட்சை எழுதிய திகதி | ................. | ............. |
| சுட்டிலக்கம் | ................. | ............. |

5. (i) அலுவலரினால் பெற்றுக்கொள்ளப்பட்ட சம்பளமற்ற / அரைச் சம்பள விடுமுறையின் எண்ணிக்கை, ஏதேனும் இருப்பின்:

   (அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையின் தரம் II இற்கு நியமித்த / பதவியுயர்வு பெற்ற திகதியிலிருந்து)

   (ii) அலுவலர் ஏதேனும் தண்டனை / தண்டனைகளுக்கு (எச்சரிக்கைகள் தவிர்ந்த) உள்ளாகியிருக்குமிடத்து தயவுசெய்து அவற்றைச் சுருக்கமாகக் குறிப்பிடவும் (முன்னளிப்பு இலக்கத்தைக் குறிப்பிடவும்)

6. ஏதேனும் கூட்டுத்தாபனம் அல்லது வேறு நியதிச்சட்ட சபையில் சேவையாற்றுவதற்கு அலுவலர் விடுவிக்கப்பட்டிருக்குமிடத்து உரிய காலப்பகுதி தொடர்பான விபரங்கள்

என்பதை நான் இத்தால் சான்றுப்படுத்துகின்றேன்.

.............................. ஆம் திகதியன்று சேவையின் தரம் II இல் முனைப்பான சேவைக்காலம் ஒன்றை அலுவலர் பூர்த்திசெய்துள்ளார் என்றும் அவர் 5 வருட திருப்திகரமான சேவைக்காலம் ஒன்றைப் பூர்த்திசெய்துள்ளார் என்றும் மேலே குறிப்பிடப்பட்ட சகல விபரங்களும் தனிப்பட்ட கோவைக்கிணங்க சரியானவை என்றும் சேவையின் தரம் I இற்குப் பதவியுயர்த்துவதற்கான

சகல தகைமைகளையும் அவர் பூர்த்திசெய்துள்ளார் என்றும் நான் இத்தால் குறிப்பிடுகின்றேன்.

நிறுவனத் தலைவரின் கையொப்பம்

பெயர்:

பதவி:

(உத்தியோகபூர்வ முத்திரை)

திகதி..................................